நகராட்சி அலுவலகம்
பொன்னேரி .

கூட்டம் எண். 27/ 2023 நாள். 27.09.2023

# <u>சாதாரணக்கூட்டம்</u>

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத் தலைவர் டாக்டர் . திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் M.B.B.S., D.G.O அவர்களின் தலைமையில் **2023** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் **29.09.2023** வெள்ளிக்கிழமை முற்பகல் **11.00** மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நடைபெறும் . அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட உள்ளதால் துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத்தலைவர்
பொன்னேரி நகராட்சி

## <u>நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u>

### <u>பொருள் எண் 1</u>

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் செப்டம்டபர் **2023** மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:– மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மான எண்:300 நாள்: 29.09.2023

**தீர்மானம்::** ஆணையர் அவர்களின் **செப்டம்பர் 2023-** மாத நாட்குறிப்பு மன்ற பதிவிற்காக மன்றம் அனுமதி அளிக்கிறது.

### <u>பொருள் எண் 2</u>

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் செப்டம்டபர் **2023** மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:– மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மாண எண்:301 நாள்: 29.09.2023

**தீர்மானம்::** பொறியாளர் அவர்களின் **செப்டம்பர் 2023** மாத நாட்குறிப்பு மன்ற பதிவிற்கு – மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 3

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லாத நிலையில் அனைத்து பகுதிகளிலும், ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளிலிருந்து குடிநீர் உறிஞ்சப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலமாகவும், குடிநீர் விநியோகக்குழாய்கள் மூலமாகவும், குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பயன்பாட்டிலுள்ள குடிநீர் விநியோகக்குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகளை நகராட்சி பணியாளர் மூலம் மேற்கொள்ள ஏதுவாக தேவையான உதிரிபொருட்களை 3 மாதங்களுக்கு தேவைக்கேற்ப சப்ளை செய்திடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

1. குடிநீர் பணியின் அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   ( ந.க.எண். 104/2023 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்:302 நாள்: 29.09.2023

**தீர்மானம்:: பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகளை நகராட்சி பணியாளர் மூலம் மேற்கொள்ள தேவையான உதிரிப்பொருட்களை 3 மாதங்களுக்கு தேவைக்கேற்ப சப்ளை செய்திட செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கேட்டு மன்றம் அனுமதி அளிக்கிறது. செலவினத்தை பொதுநிதியல் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.**

## பொருள் எண் 4

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லாத நிலையில் அனைத்து பகுதிகளிலும், ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 67 எண்ணிக்கையிலான ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார்கள் மூலம் குடிநீர் உறிஞ்சப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலமாகவும், குடிநீர் விநியோகக்குழாய்கள் மூலமாகவும், குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பயன்பாட்டிலுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர் செய்து குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக மேற்படி மின்மோட்டார்களை பழுதுநீக்கம் செய்ய , 3 மாதங்களுக்கு ஒப்பந்ததாரரை தேர்வு செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. குடிநீர் பணியின் அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண். 104 /2023 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்:303 நாள்: 29.09.2023

**தீர்மானம்::** ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர் மூழ்கி மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சீர்செய்து, குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும், பொதுநிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 5</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டம் 25.08.2023 அன்ற முதல் நடைமுறைக்கு வந்ததையொட்டி பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் ( 5 பள்ளிகள் ) சிற்றுண்டி அருந்த ஏதுவாக தட்டு மற்றும் தம்ளர் வாங்கிட , நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 28 அவர்களின் கைபேசி குறுந்தகவலின்படி தேவையான அளவு தட்டுகள் 600 எண்ணிக்கை, தம்பளர் 600 எண்ணிக்கை ரூ.50377 / க்கு அவசர அவசியம் கருதி வாங்கியது பொதுப்பணி மேற்பார்வையாளரால் செலவினம் மேற்கொண்டதற்கு அன்னாருக்கு மேற்காணும் தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு
மன்றம் அனுமதி அளிக்கலாம் .
(ந.க.எண். 223 /2023 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்:304 நாள்: 29.09.2023

**தீர்மானம்::** மாண்புமிகு தமிழக முதலமைச்சர், காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் தேவையான அளவு தட்டுகள் 600 எண்ணிக்கை, தம்ளர் 600 எண்ணிக்கை. ரூ 50377/– தொகையினை வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 6</u>

பொன்னேரி நகராட்சியில் அம்ருத் 2.0 திட்டம் 2023–24 ன்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 39 நாள் 04.09.2023ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து பணிகளை மேற்கொள்ள 22.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது .

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 23 ஜி.வி.என் நகர் பூங்காவில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் | 19.00 | M/s ஆருத்ரா கார்ப்பரேஷன் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/s அண்ணா மலையார் கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஆ/எ ஆருத்ரா கார்ப்பரேஷன் நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**( ந.க.எண் 622/2023/E1)**

நகர்மன்ற தீர்மாண எண்:305 நாள்: **29**.09.2023

**தீர்மானம்::** அம்ரூத் திட்டம் **2.0** திட்டம் **2023–2024**ன் கீழ் அரசாணை எண் **39** நாள் **04.09.2023** நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து பணிகளை மேற்கொள்ள, **22.09.2023.** ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் M./s ஆருத்ரா Corporation நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று . பணி உத்திரவு வழங்க மன்றம் பார்வைக்கு – மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 7</u>

இந்நகராட்சி கூடுதல் அலுவலக கட்டிட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய விளம்பரம் **13.07.2022**ல் மாலை முரசு நாளிதழ் மற்றும் Deccan Chronicle நாளிதழில் வெளியிட்டமைக்கு விளம்பர கட்டணமாக ரூ **57382/–/.** தூய்மை பணியாளர்களை வெளிக் கொணர்வு முறையில் பணிக்கு அமர்த்திக் கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரிய விவரம் **31.01.2023**ல் முரசொலி நாளிதழிலும், டெக்கான் கிரானிக்கல் நாளிதழிலும் வெளியிட்டமைக்கு ரூ **79695/–** ம் Bio Mining பணிக்கு LCV வாகனங்கள் சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரிய விவரம் **07.04.2023** தினமணி நாளிதழிலும் வெளியிட்டமைக்கு ரூ**15173/–** ஆக மொத்தம் ஒப்பந்தப்புள்ளிகளை மேற்குறிப்பிட்டவாறு செய்திதாள்களில் வெளியிட்டதற்கு விளம்பர கட்டணமாக ரூ **152250/–**I Sudha Ads நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அ.கு : மன்றம் ஒப்புதல் வழங்கலாம் .

ந.க. எண்: **727 / 2021/ ஹ1**
ந.க. எண்: **297 / 2022/ ஹ1**
ந.க. எண்: **754 / 2022/ ஹ1**

நகர்மன்ற தீர்மாண எண்:306 நாள்: **29**.09.2023

**தீர்மானம்::** நாளிதழ் விளம்பரங்களுக்கு 1 கூடுதல் அலுவலக கட்டிடம் 13.07.2022 – ரூ 57382/– 2. தூய்மை பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் பணிக்கு அமர்த்திக் கொள்ள 31.01.2023 ரூ 79695/– 3. Bio Mining LCV வாகனங்கள் சப்ளை செய்ய 07–04–2023 ரூ 15173/– மொத்தம் ரூ 1,52,250/– ஐ Sudha Ads நிறுவனத்திற்கு வழங்கிட மன்றம் ஒப்புதல் கோரப்பட்டு மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

## பொருள் எண் 8

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதியின்கீழ் 2023–24–ம் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள 09.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | 3வது வார்டு பெரியதம்பி தெரு முதல் நெல்லூரம்மன் கோயில் தெரு வரை , 23 வது வார்டு வெள்ளோடை சாலை, வார்டு எண் 13 அதாவுல்லாஷா தெரு மற்றும் வார்டு எண் 2 பஜனை கோயில் தெருவில் குடிநீர் பைப்லைன் விஸ்தரிப்பு பணி செய்தல் | 4.60 | திரு.எல்.ஜி.அரசு ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | M/s ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன் பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u>

1 மன்றம் அனுமதி வழங்கலாம்.

2 மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.
( ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மாண எண்:307 நாள்: 29.09.2023

**தீர்மானம்:** 3வது வார்டு பொது நிதியின் கீழ் 2023–2024 பணி மேற்கொள்ள 09.06.2023 கோரியதில் பெரியதம்பி தெரு, முதல் நெல்லூரம்மன்கோயில் தெரு வரை, 23வது வார்டு வெள்ளோடை சாலை, வார்டு எண் 13 அதாவுல்லாஷா தெரு, வார்டு 2 பஜணை கோயில் தெரு பைப்லைன் விஸ்தரிப்பு பணி செய்ய ரூ.4.60 இலட்சத்தில் M/S. Sri Thirumuruga Construction Ponneri பணி உத்திரவு வழங்கிட, மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 9

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதியின்கீழ் **2023–24**–ம் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள **21.06.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | 18வது வார்டு தாலுக்கா அலுவலக சாலை மற்றும் 19வது வார்டு ஆண்டவர் தெருவில் குடிநீர் பைப்லைன்விஸ்தரிப்பு பணி செய்தல் | 2.00 | திரு. எல்.ஜி.அரசு ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஆ/ள ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன் பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | சங்கர் மாருதி நகர், சங்கர் மாருதி 2வது தெரு அன்னை அவென்யூ 1வது தெரு, கரி கிருஷ்ண பெருமாள் கோயில் தெரு, வேணுகோபால் முதல் தெரு மற்றும் பெருமாள் கோயில் தெருவில் குடிநீர் பைப்லைன் விஸ்தரிப்பு பணி செய்தல் | 4.00 | திரு. எல்.ஜி.அரசு ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஆ/ள ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன் பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1 மன்றம் அனுமதி வழங்கலாம்.

2 மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம். **( ந.க.எண் 104/2023 /அ1)**

நகர்மன்ற தீர்மாண எண்:308 நாள்: **29**.09.2023

**தீர்மானம்::** பொதுநிதியின் கீழ், **2023–2024**–ம் திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள **21.06.2023** ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **18**வது வார்டு தாலுக்கா அலுவலக சாலை, **19** ஆண்டவர் தெரு, ரூ.**2.00** இலட்சம் சங்கர் மாருதி நகர், சங்கர் மாருதி **2**வது தெரு, அன்னை அவென்யூ **1**வது தெரு, கரி கிருஷ்ண பெருமாள் கோயில் தெரு,வேணுகோபால் முதல் தெரு பெருமாள் கோயில் தெரு, பைப்லைன் விஸ்தரிப்பு பணி M/S. Sri Thirumuruga Construction Ponneri மன்றம் அனுமதி அளிக்கிறது. தலைவரின் முன் அனுமதி பெற்று பணி தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 10

பொன்னேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு, வரும் காலம் மழைகாலம் என்பதால் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள, 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் என்கின்ற வகையில் பொன்னேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட 7240 வீடுகளுக்கு தினந்தோறும் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள 24 பணியாளர்களை 1.08.2023 முதல் 31.10.2023 வரையிலான மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தி கொள்ளவும், தோராய செலவினம் ரூ 11,70,000/—ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், நகர்மன்ற தீர்மானம் எண் 265 நாள் 31.07.2023 ன் வாயிலாக மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்போது மழைக்காலம் துவங்கிவிட்டதால் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரிடவும், மூன்ற மாத காலத்திற்கு தோராய செலவினம் ரூ. 12.00 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண்: 06/2021 /அ1)

நகர்மன்ற தீர்மாண எண்:309 நாள்: 29.09.2023

**தீர்மானம்:** பொது சுகாதாரப்பிரிவு 24 பணியாளர்களை 01.08.2023 முதல் 31.10.2023 பணியமர்த்திடவும், நகர்மன்ற தீர்மான எண் 245 நாள் 31.07.2023 செலவினம் 11,70,000/— பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும், ஒப்பந்த புள்ளிகள் கோரிட ரூ 12.00 இலட்சத்திற்கு – பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் கோரப்பட்டு மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.

## பொருள் எண் 11

பொன்னேரி நகராட்சியில் பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்று வருவதாலும், தற்போது மழை பெய்து வருவதாலும், சாலைகள் மழை காலத்தில் சேறும் சகதியுமாக உள்ளதால் பொதுமக்கள் பயன்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. இது தொடர்பாக நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் புகார் தெரிவித்தும் நாளிதழ்களிலும் தொடர்ந்து செய்திகள் வந்தவாறு உள்ளது. எனவே சேதமடைந்துள்ள அனைத்துசாலைகளையும், தற்காலிகமாக GSB ( Granular Sub Base ) கொண்டு சீரமைக்க வேண்டியுள்ளது. எனவே அதற்காக உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:— மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
(ந.க.எண். 611 /2022/அ1)

நகர்மன்ற தீர்மாண எண்:310 நாள்: 29.09.2023

**தீர்மானம்::** சேதமடைந்துள்ள அனைத்து சாலைகளையும் தற்காலிகமாக GSB கொண்டு சீரமைக்க, ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்பட்டு மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 12

பொன்னேரி நகராட்சியில் 5வது வார்டுக்குட்பட்ட ஜோதிராமலிங்கம் சுவாமி நகர் 3வது தெரு, மற்றும் 4வது தெருவில் உள்ள 1வது குறுக்கு தெரு, 2வது குறுக்கு தெரு 3வது குறுக்கு தெருக்களில் உள்ள சிமெண்ட் சாலைகள் அமைத்து சுமார் 15 வருடங்களுக்கு மேலான நிலையில் இயற்கை இடர்பாடுகளால் சாலை சேதமடைந்து வாகன போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதாலும், 14வது வார்டுக்குட்பட்ட தண்டபாணி தெரு விரிவாக்கம் , 27வது வார்டு பெரிய வேண்பாக்கம் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்றதால் சாலைகள் மிகவும் சேதமடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. மேற்படி சாலைகளை சீரமைக்க வார்டு உறுப்பினர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் தொடர்ந்து புகார்கள் வந்தவாறு உள்ளது. எனவே மேற்படி சாலைகளுக்கு மதிப்பீடு தயார் செய்து நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   ( ந.க.எண். 104 /2023 அ1 )

நகர்மன்ற தீர்மாண எண்:311 நாள்: 29.09.2023

**தீர்மானம்:: 5வது வார்டு , ஜோதி ராமலிங்கம் சுவாமி தெரு, 3வது தெரு, 4வது தெரு, 1வது ,2வது, 3வது குறுக்கு தெரு, 27வது பெரிய வேண்பாக்கம், 14வது வார்டு, தண்டபாணி தெரு விரிவாக்கம்– மேற்படி சாலைகளுக்கு மதிப்பீடு தயார் செய்து நிதி ஒதுக்கீடு செய்து DMAக்கு பிரேரணை அனுப்பி மன்றத்தின் அனுமதி வேண்டப்பட்டு, மன்றம் அனுமதி அளிக்கிறது.**

## பொருள் எண் 13

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2023–24 ன்கீழ் 1வது வார்டுக்குட்பட்ட ஆற்றங்கரை சாலை சிமெண்ட் சாலை அமைத்தல் பணிக்கு 14.07.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. மேற்படி சாலையானது பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வருவதாலும், பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணை வரப்பெற்றதாலும், சாலை விவரம் குறித்து உரிய விளக்கம் கோரியும் வருவாய்த்துறையிடமிருந்து **ஆற்றங்கரை என** அறிக்கை பெறப்படாததாலும், மேற்படி சாலைப்பணியினை இரத்து செய்து 1வது வார்டு உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று வேறு சாலைப்பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   ( ந.க.எண். 588 /2023 அ1 )

நகர்மன்ற தீர்மாண எண்:312 நாள்: 29.09.2023

**தீர்மானம்::** பொதுநிதி 2023–2024 1வது வார்டு ஆற்றங்கரை சிமெண்ட் சாலை அமைத்தல், 14.07.2023 ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஆற்றங்கரை என வருவாய்த்துறையிடமிருந்து அறிக்கை பெறப்பட்டதால், மேற்படி சாலைப்பணியினை இரத்து செய்து வேறு சாலைப்பணி மேற்கொள்ள , ஒப்புதல் வழங்க கோரியதில், மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 14

பொன்னேரி நகராட்சியில் 2வது வார்டு பகுதியில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி குடிநீர் விநியோகத்திற்காக 32 வருடங்களாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் மேற்கூரை பெயர்ந்தும், தூண்கள் பழுதடைந்துள்ளதாலும், விநியோகிக்கப்படும் குடிநீரில் இரும்பு துகள்கள் மற்றும் சிமெண்ட் காரைகள் கலந்து வருவதால் பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலை உள்ள காரணத்தினால் மேற்படி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை இடித்து அப்புறப்படுத்தும் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை இடித்து அப்புறப்படுத்த மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண்.104 /2023 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்:313 நாள்: 29.09.2023

**தீர்மானம்::** 2வது வார்டு, OHT இடித்து அப்புறப்படுத்தும் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்பட்டு மன்றம் அனுமதி அளிக்கிறது,

## பொருள் எண் 15

பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட பழவேற்காடு சாலையில் கள்ளுக்கடைமேடு நுழைவு வாயில் முதல் ஆரணி ஆற்றுப்பாலம் தொடக்கம் வரையிலான பகுதியில் மின்விளக்குகள் ஏதும் இல்லாததால் இரவு நேரங்களில் பொதுமக்கள் பயணத்திற்கு போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தினால், ஆரணி ஆற்றுப்பாலத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ள மின்கம்பங்களை போன்று மேற்குறிப்பிட்ட பகுதியிலும் புதியதாக 3 மின்கம்பங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண். 104/2023 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்:314 நாள்: 29.09.2023

**தீர்மானம்::** பழவேற்காடு சாலையில் கள்ளுக்கடை மேடு நுழைவு வாயில் முதல் ஆரணி ஆற்றுப்பாலம் – தொடக்கம் வரையில் , புதியதாக 3 மின் கம்பங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்பட்டு – மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 16

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்ட விபரப்படி தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | தெருமின் விளக்குகளின் விபரம் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1. | 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | 1257 |
| 2. | 48 வாட்ஸ் ஊகுடு விளக்குகள் | 634 |
| 3. | 50 வாட்ஸ் டுநுனு விளக்குகள் | 1204 |
| 4. | 200 வாட்ஸ் டுநுனு உயர்மின் கோபுர விளக்குகள் | 90 |
| | மொத்தம் | 3185 |

மேற்படி மொத்தம் உள்ள **3185** எண்ணிக்கையிலான தெருமின் விளக்குகளில் LED மின்விளக்குகள் நீங்கலாக ஏனைய விளக்குகளாக உள்ள குழல் விளக்குகளையும், CFL விளக்குகளையும், LED மின் விளக்குகளாக ரூ.**117.98** இலட்சம் மதிப்பீட்டில் மாற்றியமைக்க ஒப்பந்தபுள்ளிகள் கோரி பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள 50 வாட்ஸ் டுநுனு விளக்குகள் மற்றும் 200 வாட்ஸ் LED உயர்மின் கோபுர விளக்குகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சீரமைத்து தருமாறு முறையே நகர்மன்ற உறுப்பினர்கள், துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரிடமிருந்து புகார்கள் பெறப்பட்டு வருகிறது. எனவே ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள டுநுனு விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை நகராட்சியின் மின்பணியாளர்கள் மூலம் உடனுக்குடன் சீர்செய்திட தேவையான மின்உதிரி பொருட்களை கொள்முதல் செய்யவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ. **9.50** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண் 342/2022/அ1)

**அலுவலக குறிப்பு :–**

அ) பொதுமக்களின் அடிப்படை வசதிகளை கருத்திற்கொண்டு பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணியினை நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்படி பணிக்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

நகர்மன்ற தீர்மாண எண்:315 நாள்: 29.09.2023

**தீர்மானம்::** தெருவிளக்குகள் 50 வாட்ஸ் LED, 200 வாட்ஸ் LED உயர்மின் கோபுர விளக்குகள், பயன்பாட்டில் உள்ள LED, விளக்குகள், பழுதுகளை சீர் செய்திட,தேவையான மின் உதிரி பொருட்களை சொள்முதல் செய்யவும் – செலவினம் ரூ 9.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு. 1 பணியினை மேற்கொள்ளவும், நகர்மன்ற தலைவர் அவர்களின், முன் அனுமதி பெற்று, பணியினை மேற்கொண்டமைக்கும், பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 17

பொன்னேரி நகராட்சி 22வது வார்டு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்வதில் போதிய அழுத்தம் இல்லாத காரணத்தினால் சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. அதனை தொடர்ந்து அப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் கோரியதின்படி பஞ்செட்டி சாலை பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்திடவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 4.50 இலட்சத்திற்கு மன்றத்திற்கு அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மேற்படி பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   ( ந.க.எண். 104/2023 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்:316 நாள்: 29.09.2023

**தீர்மானம்:: வார்டு 22, புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்திடவும், ரூ 4.50 இலட்சத்திற்காக பணியினை மேற்கொள்ளவும், பொது நிதியின் கீழ் மன்றம் அனுமதி வழங்குகிறது.**

## பொருள் எண் 18

பொன்னேரி நகராட்சியில் 15வது நிதிக்குழு மானியம் 2022–23 திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக சப்ளை செய்யப்பட்ட 5 எண்ணிக்கையிலான இலகு ரக வாகனங்களை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனப்பதிவு செய்வதற்கும், வாகனங்களுக்கு முறையே காப்பீடு தொகை செலுத்தவும், அதற்கான செலவினத்தொகை ரூ.2,33,975/–ஐ பொதுநிதியில் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. அனுமதி அளிக்கலாம்.

2. வாகன பயன்பாட்டின் அவசியம் கருதி வாகனங்களை சப்ளை செய்த நிறுவனமான M/s Vee Vee Motors, திருவாரூர் என்ற நிறுவனத்தின் மூலம் ரூ.2,33,975/–மேற்கண்ட தொகையினை செலுத்தியதை தொடர்ந்து நிறுவனத்திற்கு தொகையினை வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
   ந.க.எண். 754 /2022 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்:317 நாள்: 29.09.2023

**தீர்மானம்::** 15 CFC 2022-2023 திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான 5 Nos இலகு ரக வாகனங்களை வாகனப்பதிவு செய்யவும், காப்பீடு தொகை செலுத்தவும், செலவினம் ரூ **2,33,975/–** பொது நிதியின் கீழ் மேற்கொள்ள, அனுமதி மன்றம் அளிக்கிறது. வாகனங்களை சப்ளை செய்த நிறுவனமான M/S VEE VEE Motors, திருவாரூர் என்ற நிறுவனத்தின் மூலம் ரூ. **233975/–** ஐ தொகையினை செலுத்தியதை தொடர்ந்து நிறுவனத்திற்கு தொகையினை வழங்கிட மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 19</u>

பொன்னேரி நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள Bolero ஈப்பு வாகனம் எண் TN18BK**4856**ன் காப்பீட்டு காலம் முடிவுற்றுள்ளதால், அதற்கான **2023–24** ம் ஆண்டிற்கான பிரிமியத்தொகை ரூ.**37842 /–** காசோலையாக செலுத்துமாறு United India Insurance மூலமாக பார்வையில் கண்டுள்ளவாறு கடிதம் வரபெற்றுள்ளது. மேற்காணும் தொகையினை காப்பீடு நிறுவனத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 654/2021/இ1)

நகர்மன்ற தீர்மாண எண்:318 நாள்: 29.09.2023

**தீர்மானம்:: Bolero ஈப்பு வாகனம் TN18 BK 4856 2023–2024 Premium Amout Rs 37842/- தொகையினை தலைவரின் முன் அனுமதி பெற்று வழங்கியது – மன்றம் ஒப்புதல் அளிக்கிறது**

## <u>பொருள் எண் 20</u>

பொன்னேரி நகராட்சியில் சட்டமன்ற அறிவிப்பின்கீழ் கட்டப்பட்டுள்ள கூடுதல் அலுவலகக்கட்டிடம் மற்றும் பழைய அலுவலகக்கட்டிடங்களில் அவ்வப்போது மின்தடை ஏற்படும் காலங்களில் அலுவலக பணிகளை சீராக மேற்கொள்ள இடையூறு ஏற்படுகிறது. எனவே பொன்னேரி நகராட்சியின் அலுவலக பயன்பாட்டின் அவசியம் கருதி **25** KVA திறன் கொண்ட டீசல் ஜெனரேட்டர் சப்ளை செய்து பொருத்திடவும், அதற்கானசெலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு

1. மேற்படி அலுவலக பயன்பாட்டின் அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. அரசின் GEM விலை விகிதத்தின்படி கிரிலோஸ்கர் தயாரிப்பு ஜெனரேட்டர் கொள்முதல் செய்யவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   ( ந.க.எண். 104 /2023 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்:319 நாள்: 29.09.2023

**தீர்மானம்::** அலுவலக அவசியம் கருதி, 25 KVA Diesel ஜெனரேட்டர் சப்ளை செய்து பொருத்திடவும், செலவினத்தினையும், பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும், பணியினை மேற்கொள்ளவும், அரசின் GEM விலை விகிதத்தின்படி, கிரிலோஸ்கர் – தயாரிப்பு ஜெனரேட்டர் கொள்முதல் செய்யவும்– மன்றம் அனுமதி அளிக்கிறது.

## மேசைப்பொருள் எண் 21

பொன்னேரி நகராட்சி பகுதியில் 1 முதல் 15 வரையிலான வார்டுகளில் குடிநீர் பைப்லைன் பழுதுபார்ப்பு பணிகள் , பாதாள சாக்கடை பணிகள் காரணமாக சேதமடைந்துள்ள சாலைகளை ரப்பீஷ் கொட்டி சமன் செய்தல் மற்றும் பொதுசுகாதார திடக்கழிவு மேலாண்மை பணிகளை JCB மூலம் மேற்கொண்டமைக்கு ஏற்பட்ட செலவினம் ரூ.5.00 இலட்சத்தை பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் ஒப்பந்ததாரர் M/s. ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

   ( ந.க.எண். 104 /2023 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்:320 நாள்: 29.09.2023

**தீர்மானம்::** WD 1 to 15 குடி நீர் பைப்லைன் பழுது பார்ப்பு பணிகள், ரப்பீஷ் கொட்டுதல், Public Health மேலாண்மை பணிகளை JCB முலம் – மேற்கொண்டமைக்கு செலவினம் ரூ.5.00 இலட்சம் பொதுநிதியில் வழங்கிட சட்டம் 1920 பிரிவு 15–ன் M/s Sri Thirumuruga Construction - பணி உத்தரவு வழங்கி பணி தொடர்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

## மேசைப்பொருள் எண் 22

பொன்னேரி நகராட்சி பகுதியில் **16** முதல் **27** வரையிலான வார்டுகளில் குடிநீர் பைப்லைன் பழுதுபார்ப்பு பணிகள் , பாதாள சாக்கடை பணிகள் காரணமாக சேதமடைந்துள்ள சாலைகளை ரப்பீஷ் கொட்டி சமன் செய்தல் மற்றும் பொதுசுகாதார திடக்கழிவு மேலாண்மை பணிகளை JCB மூலம் மேற்கொண்டமைக்கு ஏற்பட்ட செலவினம் ரூ.**4.00** இலட்சத்தை பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15–**ன் கீழ் ஒப்பந்ததாரர் S. ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

   ( ந.க.எண். 104 /2023 அ1

நகர்மன்ற தீர்மாண எண்:321 நாள்: 29.09.2023

**தீர்மானம்::** Wd 16-27 மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு ரூ. **4.00** – இலட்சம் பொதுநிதியிலிருந்து வழங்கிட Same Contractor -க்கு பணி உத்தரவு வழக்கு பணி தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.